ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1793/24 - 2013 ජනවාරි 18 වැනි සිකුරාදා - 2013.01.18
*1793/24 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில், கிரிமெட்டியாவ சிறு பிரிவில் உள்ள, தம்மனவேதிய கிராமத்தில் அமைந்துள்ள இறுதிக் கிராம வரைபட இல. 3216, மேலதிக தாள் இல. 20 இல் துண்டு இல. 1144 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.0765 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய "கொடகெலே" என அழைக்கப்படும் காணித் துண்டின் விபரம் :

*01.* **துண்டு இல. 1144 (துண்டு இல. 758 இன் பகுதி)**
காணியின் பெயர் : கொடகெலே ; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : பி. உக்குவா, வெலேவெவ, நவகத்தேகம ; விஸ்தீரணம் : 0.0765 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 06 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு நவகத்தேகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். பீ. ஜீ. பொடினேறிஸ்,
பிரதேச செயலாளர்,
நவகத்தேகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
நவகத்தேகம,
2012.12.08.

02-179

மு. கு. - இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.